**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:**10.01.2024**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ‘வேர்ல்ட் வெஜ் கோல்டன் ஜூபிலி ஸ்காலர்ஷீப்’

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூன்று முதுநிலை மாணவர்கள் திரு.கி.அரவிந்த்ராஜு (வேளாண் பூச்சியியல்), திரு.கேசம்ரெட்டி லோகேஷ்வர் (உழவியல்), செல்வி.எஸ். கௌசல்யா (பயிர்நோயியல்) மற்றும் ஒரு முதுகலை மாணவர் திரு.முகமது ஷிருக்பாஷி (பயிர் வினையியல்) ஆகியோர் தைவானின் உலக காய்கறி மையம் வழங்கும் ‘வேர்ல்ட் வெஜ் கோல்டன் ஜூபிலி ஸ்காலர்ஷீப்’-க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். உலகெங்கிலும் உள்ள முதுகலை மற்றும் முதுநிலை பயிலும் மாணவர்கள் போட்டியிடும் இத்திட்டத்தில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்களின் பயோ-டேட்டா மூலம் ஆய்வு செய்யப்பட்டு குழு உறுப்பினர்கள் மூலம் நேர்காணல் நடைபெற்றது. முதுநிலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு முறையே ஆறு மாதங்கள் மற்றும் ஒரு வருடத்திற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் மாணவர்கள் வரும் கல்வியாண்டில் தைவானில் உள்ள உலக காய்கறி மையத்தில் தங்கள் ஆராய்ச்சியை மேற்கொள்வார்கள். இக்காலத்தில், தைவானில் உள்ள உலக காய்கறி மையத்தில் பயணத் தொகை மற்றும் இலவச தங்குமிடத்துடன் மாதாந்திர உதவித் தொகையாக USD **500** பெறுவார்கள். இந்த உதவித் தொகை கடந்த கால கல்விசார் சிறப்பையும், விண்ணப்பதாரர்களின் பயோ-டேட்டாவையும் அங்கீகரிக்கிறது மற்றும் நிதி உதவியுடன் வெளிநாட்டு கூட்டு ஆராய்ச்சி வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும், மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் வெளிநாட்டு ஆராய்ச்சியில் நல்லதொரு அனுபவத்தை பெறுவார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.கே.கலாராணி, பயிர் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் எம்.சாந்தி, முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில், வேளாண் பூச்சியியல் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.முருகன், உழவியல் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.பரசுராமன், பயிர் நோயியல் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.அங்கப்பன் மற்றும் பயிர் வினையியல் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.செந்தில் ஆகியோர் முன்னிலையில் மாணவர்களின் சாதனைகளை பாராட்டினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**